www.padippakam.com

தேசாய்க்கு இலங்கையில் பலத்த பாதுகாப்பு!

31-1-79

[illegible]

8 ஆயிரம் போலீஸ் நிறுத்த ஏற்பாடு!!

கொழும்பு, ஜன.31— பிரதமர் தேசாய்க்கு பாதுகாப்பாக இலங்கையில் 8 ஆயிரம் போலீசார் நிறுத்தப்படுவார்கள்.

இலங்கை பயணம்

பிரதமர் தேசாய் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்ய பிப்ரவரி 3-ந் தேதி போகிறார். 4-ந்தேதி கண்டியில் இலங்கை சுதந்திர தினவிழா கொண்டாட்டத்தில் தேசாய் கலந்து கொள்கிறார்.

8 ஆயிரம் போலீஸ்

தேசாய்க்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

8 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள். ஆயிரம் போலீசார் துப்பாக்கியுடன் சாதாரண உடையில் மக்கள் கூட்டத்துக்கு இடையே இருப்பார்கள்.

சுதந்திர தினவிழாவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ராணுவம்

இதுதவிர 5 ஆயிரம் ராணுவம் விமானம், கடற்படை வீரர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டு இருப்பார்கள்.

இலங்கையில் சுதந்திர தினத்தை புறக்கணிக்க தமிழர் கட்சி முடிவு செய்து உள்ளது.

அதிகாரி சுட்டுக் கொலை

2-2-79

கொழும்பு, பிப். 2— சம்பந்தன் தம்பையா என்ற இலங்கை போலீஸ் அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார்.

[illegible]

[illegible]

இலங்கையில்

1 லட்சம் தமிழ் மாணவர்கள் போராட்டம்!

வகுப்புகளுக்கு செல்லவில்லை!

இலங்கை அரசு உத்தரவு

கொழும்பு, பிப். 2— இலங்கையில் 1½ லட்சம் தமிழ் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாமல் போராட்டம் நடத்துகிறார்கள்.

இலங்கையில் திருமதி பண்டார நாயக் பதவியில் இருந்த போது கல்லூரியில் மாணவர்களை சேர்ப்பதற்கு விதி முறைகள் அமுல்படுத்தப்பட்டது. அவைகள் தமிழ் மாணவர்களுக்கு பாதகமாக இருந்ததால் தமிழர் கட்சி கடுமையாக எதிர்த்தது. பழைய ஆட்சி கவிழ்ந்து ஜெயவர்த்தனே ஆட்சிக்கு வந்தபோது கல்லூரி கட்டுப்பாடுகள் ரத்து செய்யப்பட்டு விட்டன.

ஆனால் இப்போது புதிய விதி முறைகள் கொண்டு வரப்பட்டு இருக்கின்றன.

அதன்படி, கல்லூரிகளில் திறமை அடிப்படையில் 30 சதவீத இடம் ஒதுக்கப்படும். பிற்பட்ட மாவட்டங்களுக்கு 15 சதவீதமும், மீதி இன அடிப்படையிலும் இடங்கள் ஒதுக்கப்படும்.

தமிழர்களுக்கு பாதகம்

இதுவும் தமிழர்களுக்கு பாதகமானதுதான். திருமதி பண்டார நாயக்கின் சட்டம் புதிய வடிவத்தில் வந்துள்ளது என்று தமிழர் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

75 சதவீதம் திறமை அடிப்படையிலும் மற்ற இடங்கள் பிற்பட்ட மாவட்டங்களுக்கும் ஒதுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோருகிறார்கள்.

போராட்டம்

இந்த கோரிக்கையை வற்புறுத்த தமிழ் பகுதி மாணவர்கள் 1 வாரம் கல்லூரிகளுக்குச் செல்லாமல் பகிஷ்கரிக்க வேண்டும் என்று தமிழர் கட்சி வேண்டுகோள் விடுத்து இருந்தது.

அதன்படி தமிழ் மாணவர்கள் 1½ லட்சம் பேர் வகுப்புகளுக்கு செல்லவில்லை.

இலங்கையில்

[illegible]

தமிழ் போலீஸ் அதிகாரி சுட்டு கொலை!

3-2-79

தலைமறைவான தமிழ் இளைஞர்களை பிடிக்க போனவர்!!

கொழும்பு, பிப்.3— இலங்கையில் தமிழ் இளைஞர்கள் பற்றி துப்பறிந்து வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவர் ஒரு தமிழர் ஆகும்.

விடுதலைப்புலிகள்!

இலங்கையில் தமிழ் இளைஞர்கள் "விடுதலைப்புலி" என்ற பெயரில் இயக்கம் அமைத்து தனிநாடு கேட்டுபோராடி வருகிறார்கள் அல்லவா? தலைமறைவாக இருந்து செயல்பட்டு வரும் இவர்களை பிடிப்பதில் இலங்கை போலீசார் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர்.

11 போலீஸ் அதிகாரிகள் கொலை

இந்த விடுதலை புலிகள் தங் [illegible] 11 போலீஸ் அதிகாரிகளை இதுவரை கொன்று விட்டதாக கூறப்படுகிறது.

விமானம் வெடித்தது

சமீபத்தில் "ஏர்சிலான்" விமான நிறுவனத்தை சேர்ந்த "ஆரோல்" விமானம் ஒன்று வெடிவைத்து தகர்க்கப்பட்டது. இந்த விமானம் கொழும்பு அருகில் உள்ள விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தபோது திடீரென்று வெடித்து தீப்பிடித்து எரிந்தது. விடுதலை புலிகள் தான் அந்த விமானத்தை வெடி வைத்து தகர்த்ததாக கூறப்பட்டது.

போலீஸ் அதிகாரி சுட்டு கொலை

தொடர்பாக சில தமிழ் இளைஞர்களை போலீசார் தேடி வந்தார்கள். அந்த இளைஞர்கள் இருக்கும் இடத்தை கண்டு பிடிப்பதற்காக சம்பந்தன் தம்பையா என்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் அனுப்பப் பட்டார். இவரும் ஒரு தமிழர் ஆகும்.

இந்த போலீஸ் அதிகாரி தமிழர் வசிக்கும் பகுதியான கொக்குவில் என்ற இடத்தில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரையும் சேர்த்து இதுவரை 12 போலீஸ் அதிகாரிகள் கொலை செய்யப்பட்டு உள்ளனர்.

வலைவீச்சு

போலீஸ் அதிகாரி சம்பந்தன் கொலை செய்யப்பட்டது தொடர்பாக "விடுதலை புலி" இயக்கத்தை சேர்ந்த 2 தமிழ் இளைஞர்களை போலீசார் தேடி வருகிறார்கள்.

இலங்கை போலீசாருக்கு இந்த விடுதலை புலிகள் பெரிய தலைவலியாக இருந்து வருகி

2-2-79

போலீஸ் அதிகாரி சுட்டுக்கொலை

கொழும்பு, [illegible] 2

இலங்கையில் தமிழ் இளைஞர்கள் "விடுதலை புலிகள்" என்ற பெயரில் இயக்கம் அமைத்து தனி நாடு கேட்டுபோராடி வருகிறார்கள் அல்லவா?

இந்த இயக்கத்தை சேர்ந்த இளைஞர்கள் இதுவரை 11 போலீஸ் அதிகாரிகளை சுட்டுக்கொன்று உள்ளனர். இப்போது இந்த இயக்கம் பற்றி துப்பறிந்து வந்த [illegible]

படிப்பகம்